

புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2048 | மே 11, 2017 | புரட்சி 16 | முழக்கம் 17 | விலை: ரூ.3.00

## தமிழகத்தில் இந்தியைத் திணிப்பதை அனுமதிக்க முடியாது!

# ஜுன் 5இல் சென்னையில் மத்திய அரசு பெயர்ப் பலகையில் இந்தி அழிப்பு

## கழக தலைமைக் குழுவின் முக்கிய முடிவுகள்


*சென்னையில் மத்திய அரசு அலுவலக வளாகமான சாஸ்திரி பவனில் உள்ள உள்துறை அமைச்சகத்தின் பெயர்ப் பலகையில் உள்ள இந்தி எழுத்துகளை அழிக்கும் போராட்டத்தை ஜுன் 5இல் திராவிடர் விடுதலைக் கழகம் நடத்துகிறது.*

இந்தியே இந்தியாவின் ஆட்சிமொழி என்பதை வலியுறுத்தும் 1976ஆம் ஆண்டு ஆட்சி மொழி விதிகள் இந்தியாவில் தமிழ்நாட்டுக்கு மட்டும் பொருந்தாது என்று மத்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்ட அதிகார பூர்வ அறிவிப்பிலேயே 1 (ii)ஆவது பிரிவில் "They shall extend to the whole of India, except the state of Tamil Nadu" - என்று தெளிவாக குறிப்பிடப்பட்டிருந்தது. 1987, 2007, 2011இல் திருத்தங்கள் செய்யப்பட்டன. 2007ஆம் ஆண்டுக்குப் பிறகு தமிழ்நாட்டுக்கு தந்த விதிவிலக்கை நீக்கிவிட்டார்கள். இந்த உள்துறை அமைச்சக ஆவணத்தில் மாநில ஆட்சி மத்திய ஆட்சிகளில் இந்தியைப் பயன்படுத்துதல் இரண்டு ஆட்சிகளுக்கிடையிலான தகவல் தொடர்புகளில் இந்தியைப் பயன்படுத்துதல் குறித்து ஆட்சி மொழிச் சட்டத்தில் இடம் பெற்றுள்ள பிரிவுகள் விளக்கப்பட்டுள்ளன.

ஆட்சி மொழி சட்டத்தின்படி இந்தியாவின் மாநிலங்கள் 3 மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளன. 'ஏ' பிரிவு மண்டலங்களில் பீகார், அரியானா, இமாச்சல பிரதேசம், மத்திய பிரதேசம், சத்தீஸ்கர், உத்தரகான்ட், ராஜஸ்தான், உ.பி. மற்றும் யூனியன் பிரதேசங்களான டெல்லி, அந்தமான் மற்றும் நிக்கோபர் தீவுகள் (இவை இந்தி பேசும் மாநிலங்கள்). 'பி' பிரிவு மண்டலத்தில் குஜராத், மகாராஷ்டிரா, பஞ்சாப் மற்றும் யூனியன் பிரதேசங்களான சண்டிகார், டாமன் மற்றும் டையூ, தாத்ரா மற்றும் நாகர் ஹேவலி, 'சி' பிரிவு மண்டலத்தில் மேற்குறிப்பிட்ட மண்டலங்களில் இடம் பெறாத மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் இடம் பெற்றுள்ளன. 'ஏ' பிரிவு மண்டலங்களில் மாநில அரசின் தொடர்புகள் கட்டாயம் இந்தியில் இருத்தல் வேண்டும். ஆங்கிலத்திலும் இருக்குமானால், இந்தி மொழி பெயர்ப்போடும் இருக்க வேண்டும். 'பி' மண்டலத்தில் உள்ள மாநிலங்களுக்கு இடையிலான தொடர்புகள் இந்தி மற்றும் ஆங்கிலத்தைப் பயன்படுத்த வேண்டும். 'சி' மண்டலங்களில் உள்ள மாநிலங்களில் ஆங்கிலம் தொடர்பு மொழியாக இருக்கும் என்று ஆட்சி மொழி சட்டம் கூறுகிறது. மத்திய அரசோடு ஏ, பி பிரிவு மண்டலங்களின் தொடர்புகளில் இந்தி கட்டாயம். ஆங்கிலத்தை தேவைப்பட்டால் பயன்படுத்தலாம்.

இந்த நிலையில் நடுவண் பா.ஜ.க. ஆட்சி இந்தி மொழி பேசாத மாநிலங்களின் உரிமைகளில் குறுக்கிட்டு, இந்தித் திணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இரு மொழிக் கொள்கை அமுலில் உள்ள தமிழ்நாட்டில் மத்திய அரசு அலுவலகங்கள், தமிழ்நாட்டில் செயல்படும் கேந்திர வித்யாலயா மற்றும் சி.பி.எஸ்.ஈ. பள்ளிகள், தமிழ் நாட்டில் இயங்கும் விமான நிலையங்களில் இந்தியைத் திணிக்க பா.ஜ.க. ஆட்சி முடிவு செய்துள்ளது. 2011ஆம் ஆண்டு நாடாளுமன்ற நிலைக் குழு சமர்ப்பித்த பரிந்துரையை நடைமுறைப்படுத்துவதாக பா.ஜ.க. ஆட்சி கூறுகிறது. இது குறித்து சென்னையில் கடந்த மே 6ஆம் தேதி திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில், பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் முன்னிலையில் கூடிய தலைமைக் குழுவில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

ஆட்சி மொழிச் சட்டத்திலிருந்து தமிழ் நாட்டுக்கான விதிவிலக்கு நீக்கப்பட்டதோடு தமிழ் நாட்டில் இரு


राजभाषा विभाग
DEPARTMENT OF OFFICIAL LANGUAGE

Official Language Rules, 1976
The Official Languages (Use for Official Purpose of the Union)
RULES, 1976
(As Amended, 1987, 2007, 2011)

G.S.R 1052 - In exercise of the powers conferred by section 8, read with sub-section(4) of section 3 of the Offi... Act, 1963 (19 of 1963), the Central Government hereby makes the following rules, namely :

1. Short title, extent and commencement -
   i. These rules may be called the Official Languages (Use for Official Purposes of the Union) Rules, 1976.
   ii. They shall extend to the whole of India, except the State of Tamilnadu.
   iii. They shall come into force on the date of their publication in the Official Gazette.
2. Definitions - In these rules, unless the context otherwise requires :-

மொழிக் கொள்கை நடை முறையில் இருப்பதற்கு முரணாக இந்தி திணிப்பு நடக்கிறது. இது இந்தி பேசாத மாநிலங்களுக்கு நேரு தந்த உறுதிமொழிக்கு எதிரானது. இதை எதிர்க்கும் நோக்கில் தமிழ்நாட்டில் மத்திய அரசு அலுவலக வளாகமான சாஸ்திரி பவனில் உள்ள உள்துறை அமைச்சகத்தின் பெயர்ப் பலகை இந்தியிலேயே இருப்பதை தார் கொண்டு அழிக்கும் போராட்டத்தை ஜுன் 5ஆம் தேதி நடத்துவது என முடிவு செய்யப்பட்டது. அதுவரை இந்தி திணிப்பு குறித்து மக்களிடையே பரப்புரை இயக்கங்களை நடத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

கொளத்தூர், திருப்பூர், விழுப்புரம் மாவட்டங்களில் முதல்கட்டமாக கொள்கைப் பயிற்சிப் பட்டறைகளை நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டு மே 20, 21 தேதிகளில் விழுப்புரம் மாவட்டத்திலும், மே 23, 24 தேதிகளில் கொளத்தூரிலும், ஜுன் 11, 12 தேதிகளில் திருப்பூர் மாவட்டத்திலும் நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது. பெண்களுக்கான தனி பயிற்சிப் பட்டறை, பெங்களூரில் நடைபெறவிருக்கும் குழந்தைகள் பழகு-மகிழ்வு முகாம், உணவு உரிமைகளில் குறுக்கிடும் இந்துத்துவா கொள்கைகளுக்கு எதிராக மாட்டுக்கறி விருந்து நடத்துதல் குறித்தும் கழகப் பரப்புரைக்கான அணுகுமுறைகள் குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டது.

கழகத்தின் இணையதளம் சிறப்பாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது. இதன் பயன் மேலும் கூடுதலாக சென்றடைய கழக ஆதரவு இணையதள முகவர்களின் மண்டல சந்திப்புகளை நடத்துவது எனவும் முடிவு செய்யப்பட்டது.

# இந்தியா இனி 'இந்தி'யா?

*2011-ம் ஆண்டு நாடாளுமன்ற நிலைக்குழு சமர்ப்பித்த இந்தி மொழி தொடர்பான பரிந்துரைகளுக்குக் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி இப்போது ஒப்புதல் அளித்துள்ளார். இந்தி பேசாத மாநிலங்களின் மீது இடியைப்போல் இறங்கியிருக்கும் இந்தப் பரிந்துரைகள் கீழ்வருமாறு...*

1. ஜனாதிபதி, பிரதமர், மத்திய மந்திரிகள் உள்ளிட்ட தலைவர்கள், குறிப்பாக யாருக்கெல்லாம் இந்தி தெரியுமோ, அவர்கள் இனி நாடாளுமன்றத்திலும் பொது விழாக்களிலும் இந்தியில்தான் பேச வேண்டும்
2. விமானங்களில் இந்தியில்தான் அறிவிப்புகளை வெளியிட வேண்டும். அதைத் தொடர்ந்து, ஆங்கிலத்தில் அறிவிப்புகள் வெளியிடப்பட வேண்டும்.
3. இனி, விமானங்களில் வழங்கப்படுகிற செய்தித்தாள்கள் மற்றும் பத்திரிகைகள் 50 சதவிகிதம் இந்தி மொழியில் இருக்க வேண்டும். ஏர் இந்தியா விமான நிறுவனத்தின் டிக்கெட்டுகளிலும் இந்தி பெருமளவு பயன்படுத்தப்பட வேண்டும்.
4. மத்திய அரசின் டேராடூன் ஐ.ஏ.எஸ். பயிற்சி நிலையத்தில் அனைத்துப் பயிற்சி ஏடுகளும் இந்தி, ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளைக்கொண்டதாக இருக்க வேண்டும்.
5. பள்ளிக் கல்வித்திட்டத்தில் இந்தி கட்டாயப் பாடமாகச் சேர்க்கப்படவேண்டும். முதல் கட்டமாக சி.பி.எஸ்.இ மற்றும் கேந்திரிய வித்யாலயா பள்ளிக்கூடங்களில் 10ஆம் வகுப்பு வரையில் இந்தி கட்டாயப் பாடமாக வைக்கப்படவேண்டும். இது தொடர்பாக மாநில அரசுகளுடன் மத்திய அரசு ஆலோசனை நடத்தி, கொள்கை வகுக்க வேண்டும்.

6 இந்தி மொழி பேசாத மாநிலங்களில் அமைந்துள்ள பல்கலைக்கழகங்கள், கல்வி நிறுவனங்களில், தேர்வுகள் மற்றும் நேர்முகத் தேர்வுகளில் இந்தியில் பதில் அளிப்பதை விருப்புரிமைத் தேர்வாகக் கொள்ள வேண்டும்.

*இந்தப் பரிந்துரைகள் அனைத்தும் ஆறு ஆண்டுகளுக்கு முன்பு, அதாவது காங்கிரஸ் ஆட்சியின்போது அமைக்கப்பட்ட நாடாளுமன்ற நிலைக்குழுவால் முன்மொழியப்பட்டவை. இந்த நிலைக்குழுவின் தலைவரே, தமிழகத்தைச் சேர்ந்த, முன்னாள் நிதியமைச்சர் ப.சிதம்பரம்தான்.*

*இந்தியைத் திணிப்பதற்கான காங்கிரஸ் பரிந்துரைகளை பாரதிய ஜனதா கட்சியின் ஆட்சியில், 'இந்தி'யாவின் ஜனாதிபதி ஏற்றுக்கொண்டு ஒப்புதல் வழங்கியிருக்கிறார் என்பதுதான் உண்மை. பல்வேறு மொழிகள், தேசிய இனங்கள், பண்பாடுகளை அழித்து, இந்தி என்ற ஒற்றைமொழியை அனைத்துமட்டங்களிலும் கொண்டுவரும் நடவடிக்கைதான் இது.*

*"காங்கிரஸ் இல்லாத இந்தியாவை உருவாக்குவோம்" என்றார் மோடி. ஆனால், இதையெல்லாம் பார்க்கும்போது, இந்தி தவிர்த்த பிறமொழிகள் இல்லாத இந்தியாவை உருவாக்குவதுதான் நோக்கம்போலத் தெரிகிறது.*

*நாம் அனைவரும் 'இந்தியர்' என்று இதுவரை சொல்லிவந்ததன் உண்மையான அர்த்தம், இனி 'இந்தி'யர் என்பதுதானோ?*

*இனி, ஆனந்த விகடன் தலையங்கமாவது தமிழில் இருக்கலாமா, அல்லது இதுவும் இந்தியில்தான் இருக்கவேண்டுமா?*

**நன்றி : ஆனந்தவிகடன் தலையங்கம், 3.5.2017**

# குஜராத்தின் சாதி ஒழிப்பு இளம் போராளி மேவானி பேட்டி

# "பெரியார் போன்ற தீரர்களைப் பெற்றதற்கு பெருமைப்படவேண்டும்!"

ஜிக்னேஷ் மேவானி குஜராத் மக்களின் மனங்களில் ஆழ, அகல பதிந்துவிட்ட ஒரு பெயர். செத்த மாட்டை சுத்தம் செய்ய மாட்டோம், 'மாட்டின் வாலை நீங்கள் வைத்துக் கொண்டு 5 ஏக்கர் நிலத்தை எங்களுக்கு கொடுங்கள்' என்று குஜராத்தின் உனாவில் லட்சக்கணக்கான தலித் மக்களை ஒன்று திரட்டிய எழுச்சியின் நாயகன். சென்னையில் நடைபெற்ற அம்பேத்கர் பிறந்த நாள் சொற்பொழிவில் கலந்து கொள்ள வந்திருந்த அவர் அளித்த பேட்டி:

***குஜராத்தில் பாரதிய ஜனதா அரசுக்கு எதிராக உனாவில் மிகப்பெரிய எழுச்சியை நீங்கள் நடத்தி யிருந்தீர்கள், இது பாஜகவுக்கு பெரும் பின்னடைவு என்று பேசப்பட்டது, ஆனால் அதன் பின்னர் நடந்த உ.பி. தேர்தலில் பாஜக வெற்றி பெற்றதே, உத்தரப் பிரதேசத்தில் 21 சதவீத தலித் மக்கள் இருக்கிறார்கள் , ஆனால் அவர்கள் மத்தியில் உனா எழுச்சி எந்தத் தாக்கத்தையும் உருவாக்க வில்லையா?***

தேர்தல் அரசியலில் பாஜக வெற்றி பெற்றிருக்கிறது என்பது உண்மைதான். உனா எழுச்சி என்பது தேர்தல் அரசியலுக்கானது அல்ல, இது ஒரு சமூக மாற்றத்துக்கான நிகழ்வு. இதனால் தேர்தல் அரசியலில் உடனடி தாக்கத்தை ஏற்படுத்த முடியும் என்று நான் நம்பவில்லை. தேர்தல் அரசியல் தனக்கென்று ஒரு வடிவத்தைக் கொண்டிருக்கிறது. உ.பி.யில் தலித் அமைப்புகளின் கடந்த கால செயல்பாடுகள், தவறுகள் ஆகியவையும் ஒரு தாக்கத்தை உருவாக்கியிருக்கின்றன. பாஜக வெற்றி பெற்று விட்டது என்பதற்காகவே, உனா எழுச்சி போன்ற நிகழ்வுகளின் தாக்கத்தை குறைத்து மதிப்பிட்டு விட முடியாது. ஆனால் ஒன்றை உறுதியாகக் கூறுகிறேன், உ.பி.யில் பாஜக பெற்றிருக்கும் வெற்றியால் அரசியலமைப்புச் சட்டத்திற்கே பெரும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. இது போன்ற ஆபத்துகள் வரும் போது அனைத்துத் தரப்பு மக்களும் பாதிக்கப் படுவார்கள், அப்படி நிகழும் போது இயல்பாகவே தலித் மக்கள் அதிகம் பாதிக்கப்படுவார்கள்.

***தலித்துகளுக்கான நில அதிகாரத்தில்தான் உங்களின் முழுக் கவனமும், செயல்பாடும் இருக்கிறது. நில அதிகாரத்தை நீங்கள் வலியுறுத்துவதன் தேவை எங்கிருந்து எழுகிறது?***

நில அதிகாரம் என்பதை மட்டும் நான் வலியுறுத்தவில்லை, வேறு பல்வேறு உரிமைகள் குறித்து பேசி வருகிறேன். ஆனால் இந்தியாவில், யாரிடம் நிலம் இருக்க வேண்டும், யாரிடமும் இருக்கக் கூடாது என்பதை தீர்மானிப்பது சாதிய அமைப்பு முறை. சாதிய சமூக அமைப்பு முறையில் மாற்றம் கொண்டு வர வேண்டுமென்றால் நிலச் சீர்திருத்தம் தேவை, தலித்துகள் கையில் நிலம் வரும்போதே இந்த அமைப்பு முறை தகரும்.

***நகரமயமாக்கல் மிக வேகமாக நிகழ்ந்து வரும் இந்தியா போன்ற நாட்டில், தலித்துகளுக்கு நிலம் வழங்குதல் என்பது மட்டும் போதுமானதா?***

இல்லை, நிச்சயம் இல்லை நிலம் மட்டும் போதாது. தலித்துகளுக்கான நில உரிமை என்பது சாதிய ஒழிப்பின் ஒரு முக்கிய அங்கமே. நிலம் மட்டுமே போதும் என சொல்ல மாட்டேன். விவசாயம் தீவிரமான சரிவை சந்தித்து வரும் நிலையில் நிலம் மட்டும் போதாது, தலித்துகளுக்கு நிலம் கொடுப்பதோடு, விவசாயம் செய்வதற்கான அனைத்து உதவிகளையும் அரசு செய்து தர வேண்டும், அப்போது தான் சாதிய அடுக்குகளை ஒழித்துக் கட்ட முடியும். மேலும் தலித்துகளைப் பொறுத்தவரை 75% கிராமப்புறங்களில் வாழ்கின்றனர். கிராமப்புறங்களில் யாரோ ஒருவரின் வயலில் மணிக் கணக்கில் உழைக்கும் தலித்துகள், தங்களுக்கு என்று நிலம் வழங்கப்பட்டால் உழைக்க மாட்டார்களா? இதனால்தான் தலித்துகளுக்கான நில அதிகாரத்தை வலியுறுத்துகிறேன்.

***தலித்துகளின் நில உரிமை போன்றே, வளர்ந்து வரும் பொருளாதார யுகத்தில் தனியார் துறையில் இட ஒதுக்கீடு என்கிற கோரிக்கையும் முக்கியத்துவம் பெறுகிறது. அது பற்றிய உங்கள் கருத்து என்ன?***

தனியார் துறை என்பது மிக சொற்பமான வேலைவாய்ப்பையே வழங்கி வருகின்றனர். மோடி, தான் பிரதமரானால் அனைவருக்கும் வேலைவாய்ப்பு என்று பெரிய அளவில் முழக்கமிட்டார். ஆனால் நடந்திருப்பது என்ன? வேலையிழப்போர் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. ஆனால் நாம் வலியுறுத்த விரும்புவது அரசுத் துறை முதலீடுகளையும் அரசுத் துறை வேலை வாய்ப்புகளையும் அதிகரிக்க வேண்டும் என்பதைத்தான்.



> பெரியாரின் தாக்கம் மற்ற மாநிலங்களை விட தமிழகத்தை சமூக நீதித் தளத்தில் ஒரு படி மேலேதான் நிறுத்தியுள்ளது.

மேலும் அம்பேத்கர் சொல்வது போன்று சாதி என்பது உழைப்புச் சக்தியை மட்டுமல்ல, உழைப்பாளர்களையும் பிளவுபடுத்துகிறது. இதனால் இன்றைய சூழ்நிலையில் தனியார் துறையில் தலித்துகளுக்கு இட ஒதுக்கீடு கோருவதை விட அரசுத் துறைக்கு முன்னுரிமை என்ற கோரிக்கையை தான் வலியுறுத்த வேண்டும். நேர்மையாகச் சொல்ல வேண்டும் என்றால் தலித்துகளுக்கான தனியார் துறை இட ஒதுக்கீடு குறித்து நான் மேலும் படிக்க வேண்டும், அதுவரை தனியார் துறை இட ஒதுக்கீடு குறித்த எனது கருத்து மாற்றத்துக்குட்பட்டதுதான். அதனால் இப்போதைக்கு ஒரு இறுதி கருத்தை என்னால் கூற முடியாது.

***தமிழகம் போன்ற மாநிலங்களில் சமூக நீதி என்பது ஓரளவு நல்ல அளவிலேயே செயல்படுத்தப்பட்டுள்ளது, குஜராத்தில் இருந்து வரும் நீங்கள் தமிழக சூழலில் தலித்துகளின் நிலையையும், சமூக நீதியையும் எப்படி பார்க்கிறீர்கள் ?***

தமிழகத்தைக் குறித்து எனக்கு அதிக தரவுகள் தெரியாது. ஆனால் சமீப வருடங்களில் நிகழ்ந்து வரும் நிகழ்வுகள் கவலையளிக்கிறது. ராமசாமி பெரியார் போன்ற மாபெரும் தலைவர்கள் தந்த ஒரு மாநிலத்தில் கௌரவக் கொலைகள், தலித்துகளுக்கு எதிரான வன்கொடுமைகள் நடைபெறுகிறது என்பதை அதிர்ச்சி கலந்த ஆச்சரியத்தோடுதான்

> சாதி என்பது உழைப்புச் சக்தியை மட்டுமல்ல, உழைப்பாளர்களையும் பிளவுபடுத்துகிறது.

பார்க்க வேண்டியிருக்கிறது. ஆனால் ராமசாமி பெரியாரின் தாக்கம் மற்ற மாநிலங்களை விட தமிழகத்தை சமூகநீதித் தளத்தில் ஒரு படி மேலேதான் நிறுத்தியுள்ளது. சமூக நீதி என்பது சாதி ஒழிப்பின் தவிர்க்க முடியாத ஒரு அங்கம். ஆனால் முற்போக்கு சக்திகளாக எங்களிடம் சாதி ஒழிப்புக்கான ஒரு தெளிவான திட்டம் இல்லை. தெளிவான திட்டத்தோடு சாதியை ஒழிக்காமல் நிஜமான சமூக நீதி உருவாக வாய்ப்பில்லை, ஆனால் ராமசாமி பெரியார் போன்ற தீரர்களைப் பெற்றதற்கு நாம் பெருமைப் பட வேண்டும். அம்பேத்கரை விட மிகப் பெரிய பகுத்தறிவுவாதியாக பெரியார் இருந்திருக்கிறார் என்று அறிய முடிகிறது. பெரியாரை ஆழ்ந்து படிக்க வேண்டும் என எண்ணுகிறேன். ஆனால் போதுமான அளவு பெரியாரின் எழுத்துக்கள் இந்தி போன்ற மொழிகளில் மொழி பெயர்க்கப்படவில்லை என்பது வருத்தமளிக்கிறது.

***உங்களுக்கு முன் வந்த பல்வேறு தலித் தலைவர்கள், சோஷலிஸத்தின் மீது நம்பிக்கை கொண்டவர்களாக இருந்துள்ளார்கள், ஆனால் நீங்கள் நேரடியாக மார்க்சியத்தை தழுவி, அதுவே தலித் விடுதலைக்கான தீர்வு என்கிறீர்கள்? தலித் விடுதலையில் மார்க்சியத்துக்கான தொடர்பு எது?***

மனித குல விடுதலை என்ற போராட்டத்தில் காரல் மார்க்ஸ், யாரும் தீர்மானித்து விட முடியாத தொட்டு விட முடியாத உயரத்தில் நிற்கிறார். அவர் ஒரு மிகப் பெரிய தத்துவ ஞானி. சாதி என்பது வர்க்கத்தால் சூழப்பட்டது என்று பாபாசாகேப் அம்பேத்கர் கூறுகிறார். சாதியையும் வர்க்கத்தையும் தனித்தனியே பிரித்துப் பார்க்க முடியாது. இரண்டின் எதிரிகளும் ஒன்றுதான். சாதிக்கும் வர்க்கத்துக்கும் எதிரிகள் சாதியவாதமும், முதலாளித்துவமும்தான். இந்த இரண்டையும் எதிர்கொள்ள அம்பேத்கரையும் மார்க்ஸ்ஸையும் இணைந்து படிக்க வேண்டும். அம்பேத்கரை பின்பற்றுபவர்கள் மார்க்ஸை படிப்ப தில்லை, தலித்துகள் தங்களுக்கான விடுதலைப் போராட்டத்தில் முதலாளித்துவத்தையும் எதிர்க்க வேண்டும்.

***ஆனால் நீங்கள் சொல்வது போன்று இடது சாரி அமைப்புகளும் தலித் அமைப்புகள் பெரும் பாலும் ஒன்றாக இணைந்து பயணிப்பதில்லையே?***

அதைத்தான் நானும் கவலையோடு பார்க்கிறேன். இந்த இரு தரப்பும் ஒன்றிணையாமல் இருப்பதே சாதியவாதத்திற்கும் முதலாளித்துவத்திற்கும் சாதகமான ஒன்றாக உள்ளது. தலித் அமைப்புகளும் இடதுசாரிகளும் ஒன்றாக வேண்டிய தருணம் இப்போது அதிகம் தேவைப்படுகிறது. அம்பேத்கர் ஒரு முறை கூறினார் "BLUE IS ORIGINALLY RED" செம்புரட்சி உடன்தான் நீலப்புரட்சியும் நிகழும். மார்க்சியத்தைக் கைவிட்டு விட்டு தலித் விடுதலையும் சாத்தியமில்லை, தலித் விடுதலையைக் கைவிட்டு விட்டு வர்க்கப் புரட்சியும் சாத்தியமில்லை. இன்றைய கால கட்டத்தில் இவர்கள் இருவரும் இணைய வில்லையென்றால் வரலாறு தலித் அமைப்புகளையும் இடதுசாரி அமைப்புகளையும் மன்னிக்காது.

***ஒப்பீட்டளவில் கேரளாவில் நில சீர்திருத்தம் என்பது நல்ல அளவில் நடந்துள்ளதாக புள்ளி விவரங்கள் கூறுகின்றன, ஆனால் உங்கள் சமீபத்திய பேச்சில் கேரள இடது முன்னணி அரசை விமர்சித்து உள்ளீர்கள், கேரளாவின் நிலச் சீர்திருத்தம் குறித்த உங்கள் கருத்து என்ன?***

தோழர் ஈஎம்எஸ் நம்பூதிரிபாட் அரசும் அதற்கு பின்பு வந்த இடதுசாரி அரசுகளும் நில சீர்திருத்தங்களை முழு வீச்சில் மேற்கொண்டார்கள் என்பதை நான் மறுக்கவில்லை. ஒப்பீடு என்பது மற்ற மாநிலங்களில் உள்ள இடதுசாரி அரசோடு அல்லவே, மற்ற மாநில அரசியல் கட்சிகளின் கொள்கைகளில் நில சீர்திருத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லையே, ஆனால் நில சீர்திருத்தத்தை கட்சியின் கொள்கை திட்டமாக கொண்டுள்ள இடதுசாரி அரசு, அதை இன்னும் தீவிரப்படுத்த வேண்டும் என்று உரிமையோடு வலியுறுத்துகிறேன். குஜராத்தில் எங்களோடு உனா பேரணியில் கலந்து கொண்ட மார்க்சிஸ்ட் தோழர்கள் 'மாட்டு வாலை நீ வைத்துக் கொள் 5 ஏக்கர் நிலத்தை எங்களுக்கு தா' என்று கோஷமிட்டார்கள் அதைத்தான் நான், கேரளாவில் கேட்கிறேன்.

***இந்திய அளவில் தலித் அமைப்புகளோடு அரசியல் கட்சிகளை ஒன்றிணைக்க முடியும் என்று நம்புகிறீர்களா?***

நம்புகிறேன், அதற்கு முயற்சிக்கிறேன். ஆனால் இப்போதைக்கு நிலைமை வெறிச்சோடி உள்ளது. சிக்கல் என்னவென்றால் தலித்துகள் அடையாள அரசியலில் சிக்கியிருக்கிறார்கள். ஒரு மாநிலத்தில் எங்களை பட்டியல் இனத்தவர் என்று அழையுங்கள் எனப் போராடுகிறார்கள், ஒரு மாநிலத்தில் ஆதிவாசி என்று சொல்லுங்கள் என்கிறார்கள், ஆனால் நான் கூறுவது, என்ன பெயர் சொல்லி அழைத்தால் என்ன? சமூக அடுக்கில் நாம் கீழே தானே வைக்கப்பட்டுள்ளோம் அதற்கு எதிராகத் தானே போராட வேண்டும். அதை விடுத்து அடையாள அரசியலை நடத்தினால் எப்படி தீர்வு கிடைக்கும்.

***அம்பேத்கரை ஒரு தீவிர புத்தமதவாதியாகவும், சில இடங்களில் கடவுளாகவும் பார்க்கிறார்கள், தலித் எழுச்சிக்கு இதற்கும் ஏதாவது தொடர்பை பார்க்கிறீர்களா ?***

இது அடிப்படை முட்டாள்தனம், அம்பேத்கரை கடவுளாகப் பார்ப்பதை விட முட்டாள் தனம் வேறு ஒன்றில்லை. அம்பேத்கரை விமர்சிக்க வேண்டும் என்பதே என் கருத்து. அதையே நான் விரும்புகிறேன். அம்பேத்கர் விமர்சனத்துக்கு அப்பாற்பட்டவரல்லர். அம்பேத்கர் வாழ்ந்த காலத்தில் அவர் தலித்துகளுக்கு ஆற்றிய சேவையை, செய்ய தவறியவற்றை ஆய்வு செய்ய வேண்டும் விமர்சிக்க வேண்டும் என்று நானே தீவிரமாக சிந்தித்து வருகிறேன். விமர்சிக்காமல் எதையும் ஏற்க கூடாது.

***இறுதியாக ஒரு கேள்வி, உனா எழுச்சிக்குப் பிறகு தமிழகத்தைச் சேர்ந்த தலித் அமைப்புகளின் தலைவர்கள் யாரேனும் உங்களை தொடர்பு கொண்டார்களா?***

(சிரிக்கிறார்) நீங்கள் கேட்காமல் போயிருந்தாலும் சொல்லியிருப்பேன். இதுவரை யாரும் என்னை தொடர்பு கொள்ளவில்லை, நான் அவர்களுடன் பேச விரும்புகிறேன். தொடர்பு கொள்ள முயற்சித்து வருகிறேன். ஆனால் அவர்கள் தரப்பில் மவுனம் மட்டுமே நீடிப்பது அதிர்ச்சி அளிக்கிறது. ஆனால் அதற்காக நான் அமைதியாக இருக்க மாட்டேன். நான் சென்று அவர்களை சந்தித்து அவர்களுடன் பேசுவேன் எனக்கு எந்தத் தயக்கமும் இல்லை.

**நன்றி: 'தமிழ் இந்து'**

# களப்பணிகளில் கழகத் தோழர்கள்

*தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் நடந்த கழகத்தின் களப்பணிகள் கழகப் பொறுப்பாளர்கள் பங்கேற்ற நிகழ்வுகளின் தொகுப்பு.*

## ஈரோட்டில் ‘கனி ராவுத்தர்’ குளம் மீட்பு இயக்கத்தின் தொடர் போராட்டம்

ஈரோடு நகருக்கு அருகே உள்ளது கனிராவுத்தர் குளம். 44 ஏக்கர் பரப்பளவு கொண்ட அந்தக் குளம் அரசு அதிகாரிகளின் துணையோடு பணமுதலைகளால் ஆக்கிரமிக்கப்பட்டு தற்போது வெறும்14 ஏக்கராக சுருங்கியுள்ளது. குளத்தை மீட்டெடுப்பதற்காக ‘கனிராவுத்தர் குள மீட்பு இயக்கம்’ என்ற பெயரால் தமிழத் தேசிய நடுவம் தோழர் நிலவன் ஒருங்கிணைப்பில் மக்கள் சிவில் உரிமைக் கழகத் தலைவர் கண.குறிஞ்சி, திராவிடர் விடுதலைக் கழக அமைப்புச் செயலாளர் ப. இரத்தினசாமி போன்றோர் இணைந்து மக்கள் திரள் போராட்டங்கள், நீதிமன்ற வழக்கு என்ற வழிமுறைகளில் போராடிவருகின்றனர். அதன் ஒரு பகுதியாக குளத்தை சுத்தப்படுத்தும் பணிகள் தற்போது நடந்தேறிவருகின்றன. 23-4-2017 அன்று ஈரோட்டுக்கு ஒரு நூல் வெளியீட்டுக்காக சென்றிருந்த கழகத் தலைவர் கொளத்தூர் மணி, மூத்த வழக்கறிஞர் பொ.இரத்தினம், தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்க பொதுச்செயலாளர் வி.பி.குணசேகரன் ஆகியோருடன் கனிராவுத்தர் குளப் பணிகளைப் பார்வையிட்டனர். கழக மாவட்ட செயலாளர் சண்முகப்பிரியன் உள்ளிட்ட பல தோழர்கள் உடனிருந்தனர்.

## ஈரோட்டில் அம்பேத்கரின் நூல் வெளியீடு

பகத்சிங் மக்கள் சங்கம், டாக்டர் அம்பேத்கரின் ‘இந்து மதத்தின் புதிர்கள்’ என்ற நூலின் இறுதி அத்தியாயமான ‘இராமன், கிருஷ்ணன் பற்றிய புதிர்’ என்கிற பகுதியை ”இந்து மதமே பார்ப்பனியம்-பார்ப்பனியமே இந்து மதம்” என்ற நூலை பதிப்பித்துள்ளது. அந்நூலின் அறிமுக விழா. 23-4-2017 ஞாயிறு அன்று மாலை 6-00 மணிக்கு, ஈரோடு, ரீஜென்சி ஓட்டல் கூட்ட அரங்கில், நடைபெற்றது. நிகழ்வுக்கு நூலை தொகுத்து வெளியிட்ட மூத்த வழக்கறிஞர் இரத்தினம் தலைமை தாங்கினார். நூல் குறித்த மூத்த வழக்கறிஞர்கள் திருமலை ராஜன், ப.பா.மோகன், மக்கள் சிவில் உரிமைக் கழக மாநிலத் தலைவர் கண.குறிஞ்சி ஆகியோரின் அறிமுக உரையைத் தொடர்ந்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிறைவுரை ஆற்றினார். கழக அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி நன்றி கூறினார்.

## தலைமை கழகத்துக்கு வி.சி.க. தோழரின் அன்பளிப்பு

சேலம் மாநகர விடுதலை சிறுத்தைகள் கட்சியின் 56ஆவது கோட்ட செயலாளர் தோழர் எம்.எஸ்.ஏ. ஆர்ட்ஸ் முத்துராசு, திராவிடர் விடுதலைக் கழகத் தலைமை அலுவகத்தில் வைப்பதற்காக, கிரானைட் கல்லில் பெரியார்-அம்பேத்கர் ஆகியோரின் உருவப் படங்களுடனும், கடிகாரம் பொறுத்திய முகவரிக் கல்லை 26-4-2017 அன்று காலை கழகத் தலைவர் கொளத்தூர் மணியிடம் வழங்கினார். கழகத் தோழர் எல்.ஐ.சி. தனசேகரன் உடனிருந்தார்.

## புதுவை அம்பேத்கர் விழாவில் கழகத் தலைவர் பங்கேற்பு

26-4-2017 அன்று மாலை புதுச்சேரி, தவளக் குப்பத்தில் புரட்சியாளர் அம்பேத்கர் பிறந்த நாள் விழா, புரட்சியாளர் அம்பேத்கர் தொண்டர் படையின் சார்பாகக் கொண்டாடப்பட்டது. மாலை 6-00 மணியளவில் ஏம்பலம் அடவு கலைக் குழுவினரின் பறையிசை முழக்கத்தோடு நிகழ்வு தொடங்கியது.

நிகழ்வுக்கு அம்பேத்கர் தொண்டர் படைத் தலைவர் பாவாடைராயன் தலைமை வகித்தார். த.பெ.தி.க. அமைப்பாளர் வீர மோகன், கிராமப்புற மக்கள் மேம்பாட்டு இயக்கத் தலைவர் சந்திரசேகரன், மக்கள் உரிமை இயக்கத் தலைவர் செகநாதன், வழக்கறிஞர் இராமலிங்கம், தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் புதுவை மாநில அமைப்பாளர் சிரீதர் ஆகியோர் உரையாற்றியதை தொடர்ந்து ஆதி தமிழர் விடுதலை இயக்கத் தலைவர் வினோத், திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

## ஆத்தூரில் அம்பேத்கர் வாசகர் வட்டம்

சேலம் மாவட்டம் ஆத்தூரில் கடந்த 14-4-2017 அன்று அம்பேத்கர் பிறந்த நாளில், பெரியார் அம்பேத்கர் வாசகர் வட்டம் தொடங்கப்பட்டது. அதையொட்டி அன்று கழகத் தோழர்களின் முயற்சியில் ஒரு நூலகமும் திறக்கப்பட்டது. நூலகத்தை வடசென்னிமலை அரசினர் கலைக் கல்லூரிப் பேராசிரியரும் பெரியாரியல் சிந்தனையாளருமான பேரா.முருகேசன் திறந்துவைத்தார். அக்கல்லூரிப் பேராசிரியர் அம்பேத்கர் சிறப்புரையாற்றினார்.

26-4-2017 அன்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி, அந்நூலகத்துக்கு, குடிஅரசு தொகுப்பினையும், அம்பேத்கர் நூல் தொகுப்பினையும் மாவட்டக் கழகத் துணைச் செயலாளரும், நூலகப் பொறுப்பாளருமான ஆத்தூர் மகேந்திரனிடம் வழங்கினார்.

## பள்ளி பாளையத்தில் கழக சார்பில் அம்பேத்கர் விழா

30-4-2017 அன்று மாலை நாமக்கல் மாவட்டம், பள்ளிபாளையம் அருகே உள்ள சின்னா கவுண்டன்பாளையத்தில், பள்ளிபாளையம் நகர திராவிடர் விடுதலைக் கழகத்தின் ஏற்பாட்டில் ‘புரட்சியாளர் அம்பேத்கர் பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டம் நகர செயலாளர் தியாகு தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தின் தொடக்கத்தில் பெரம்பலூர் தாமோதரனின் ‘மந்திரமல்ல! தந்திரமே!’ செயல்முறை விளக்க நிகழ்ச்சி நடத்தப்பட்டது. கூட்டம் தொடங்குவதற்கு முன்னதாக இஸ்லாமிய மதவெறியர்களால் படுகொலை செய்யப்பட்ட கோவை ஃபாரூக்கின் படத்தை தோழர்கள் சஜீனா, மீனாட்சி ஆகியோர் திறந்துவைத்தனர்.

தோழர்கள் முத்துபாண்டி, திருச்செங்கோடு வைரவேல், மாவட்டத் தலைவர் சாமிநாதன், அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி ஆகியோரைத் தொடர்ந்து கோபி வேலுச்சாமி நகைச்சுவை பொங்க ஒரு மணி நேரம் உரையாற்றினார். இறுதியாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி, அம்பேத்கர், பெரியார் ஆகியோரின் பணிகளைக் குறிப்பிட்டு, அவர்கள் காட்டிய வழியில் பணியாற்றி சமூக விடுதலை பெறுவோம் என்றார். இளைஞரணித் தோழர் கா.யுவராசு நன்றி கூற கூடம் நிறைவுற்றது.

## கோட்டாரில் கழகம் எடுத்த புரட்சிக் கவிஞர் விழா

குமரி மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாள் விழா 30-04-2017 ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 3.00 மணிக்கு மணிமேகலை இல்லம் கோட்டாரில் சூசையப்பா தலைமையில் கொண்டாடப்பட்டது. விழாவில் மணிமேகலை வரவேற்புரையாற்றினார். தோழர்கள் நீதிஅரசர், தமிழ் மதி, இளங்கோ, சுனில்குமார், வின்சென்ட் ஆகியோர் பாவேந்தர் பற்றிய நினைவுகளைப் பகிர்ந்தனர். சிறப்பு அழைப்பாளராக ‘ஒளிவெள்ளம்’ ஆசிரியர் பிதலிஸ் வாழ்த்திப் பேசினார். மாணவிகள் ரித்திகா, மோனிகா, ஆசிகா ஆகியோர் பாரதிதாசன் கவிதை ஒப்புவித்தனர். அவர்களுக்கு கழகம் சார்பாக பெரியாரின் உயர் எண்ணங்கள் என்ற புத்தகம் பரிசாக வழங்கப்பட்டது. சத்தியராணி நன்றிகூற கூட்டம் இனிதே முடிவுற்றது. பின்பு கோட்டார் சந்திப்பில் பாவேந்தர் பாரதிதாசன் படத்தின் முன்பு கொள்கை முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

## சென்னையில் புரட்சிக் கவிஞர் சிலைக்கு கழக சார்பில் மாலை அணிவிப்பு

29-5-17 தை ஒன்றே தமிழர் புத்தாண்டு என்று முழங்கிய மக்கள் கவிஞன் “பாவேந்தர்” பாரதிதாசன் 127வது பிறந்தநாளன்று... சென்னை மெரினா கடற்கரையில் அமைந்துள்ள புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் உருவச் சிலைக்கு திராவிடர் விடுதலைக் கழக தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். கழக வழக்கறிஞர் துரை அருண், சென்னை மாவட்ட தலைவர் வேழவேந்தன், மாவட்ட செயலாளர் உமாபதி மற்றும் மாவட்ட கழகத் தோழர்கள் பங்கேற்றனர்.

## கழக தலைமைஅலுவலகத்தில் ‘கக்கூஸ்’ ஆவணப் படம் திரையீடு

1-5-17 அன்று மே நாளை முன்னிட்டு “கக்கூஸ் ஆவணப்படம்" திராவிடர் விடுதலைக் கழக தலைமை அலுவகத்தில் திரையிடப்பட்டது. திராவிடர் விடுதலைக் கழகக் குழு உறுப்பினர் அன்பு தனசேகரன், கழக தலைமை நிலைய செயலாளர் தபசி குமரன், சென்னை மாவட்ட தலைவர் வேழவேந்தன் மற்றும் இயக்க தோழர்கள் உரையாற்றினர். சென்னை மாவட்ட செயலாளர் உமாபதி ஆவணப்படத்தின் திரையிடலை ஒருங்கிணைத்து நடத்தினார். 70 தோழர்கள் பங்கேற்றனர். ஆவணப் படம், மலம் எடுக்கும் தோழர்களின் அவல நிலையை சித்தரித்தது, கண்ணீர் மல்க தோழர்கள் அந்தப் படத்தைப் பார்த்தனர்.

## பெண்களே சடலத்தை சுமந்தனர்: கழகத் தோழர் செந்தில் தந்தை இராமலிங்கம் முடிவெய்தினார்

சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் செயல்வீரர் செந்தில் (எப்.டி.எல்.) அவர்களின் தந்தை இரா. இராமலிங்கம் (73) கடந்த சில நாட்களாக உடல்நலம் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் மே 5ஆம் தேதி காலை முடிவெய்தினார். முடிவெய்திய இரா. இராமலிங்கம், தீவிரமான தி.மு.க. தொண்டர். அவரது விருப்பப்படி தி.மு.க. கொடி போர்த்தப்பட்டு எவ்வித மூடச் சடங்குகளுமின்றி இறுதி நிகழ்ச்சிகள் நடந்தன. சென்னை வில்லிவாக்கத்தில் உள்ள அவரது இல்லத்திலிருந்து மின்சார இடுகாடு வரை, பெண்களே உடலை சுமந்து வந்தனர். பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் மற்றும் சென்னை மாவட்ட கழகத் தோழர்கள் ஏராளமாக திரண்டு வந்து இறுதி வணக்கம் செலுத்தியதோடு இறுதி நிகழ்வுக்கான ஏற்பாடுகளை முன்னின்று செய்தனர்.



## சென்னையில் குழந்தைகள் பழகு முகாம்



கழக செயல்வீரர் செ.பத்ரிநாராயணன், 13ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி, ஏப்.30 ஆம் தேதி சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் ஒரு நாள் குழந்தைகள் பழகு முகாமுக்கு ஏற்பாடு செய்திருந்தது. இராயப்பேட்டை இலாயிட்ஸ் சாலையில் உள்ள விஜய் திருமண மண்டபத்தில் நடந்த இந்த முகாமில் 40 குழந்தைகள் பங்கேற்றனர். தமிழ்நாடு அறிவியல் மன்ற அமைப்பாளர் ஆசிரியர் வீ. சிவகாமி சமூக கல்வி நிறுவனத்தைச் சார்ந்த ஜெ. சியாம்சுந்தர், மோனிக்கா ஆகியோர் குழந்தைகளுக்கு கூடிப் பழகுதல், விளையாட்டு, ஓவியம், அறிவியல் குறித்த பயிற்சிகளை வழங்கினர். பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், வழக்கறிஞர் துரை, அருண், ஜெ. சியாம் சுந்தர் ஆகியோர் பயிற்சி பெற்ற குழந்தைகளுக்கு சான்றிதழ்களை வழங்கினர். காலை 11 மணியளவில் தொடங்கிய பயிற்சி, மாலை 6 மணி வரை நீடித்தது.

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# டாக்டர் கிருஷ்ணசாமி சர்ச்சைக்குரிய கருத்துகளுக்கு செ.கு. தமிழரசன் பதில்

புதிய தமிழகம் கட்சியின் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி, “பட்டியல் இனப் பிரிவு” ஒன்றே தேவை இல்லை; அதை நீக்கிவிட வேண்டும் என்றும், இதுவரை பட்டியல் இனப் பிரிவால் இந்தப் பிரிவில் அடங்கியுள்ள மக்களுக்கு எந்தப் பயனும் கிடைக்க வில்லை என்றும், ‘தமிழ் இந்து’ நாளேட்டுக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார். ‘தேவேந்திர குல வேளாளர்களை’ பட்டியலினப் பிரிவி லிருந்து நீக்கி அவர்களுக்கு மக்கள் தொகை அடிப்படையில் தனி ஒதுக்கீடு தரப்பட வேண்டும் என்று அவர் கூறியுள்ளதோடு ஒவ்வொரு ஜாதிக்கும் தனித் தனி வரலாறு கலாச்சாரம் உண்டு” என்று கூறியுள்ளார். ‘தேவேந்திர குல வேளாளர்களை பட்டியல் இனப் பிரிவில் யார் சேர்த்தார்கள் என்றே தெரியவில்லை’ என்று கூறியுள்ள அவர், “இந்தியாவில் ஒரே பட்டியலின் கீழ் அனைத்துப் பிரிவு மக்களையும் இணைத்ததே அம்பேத்கர் செய்த தவறு” என்றும் கூறியிருக்கிறார். தனித் தொகுதி முறையை காந்தியாருக்காக அம்பேத்கர் விட்டுக் கொடுத்ததை ஏற்க முடியாது என்றும், தேர்தலில் தனித் தொகுதி முறையும் ஒழிக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார். இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் தலித் மக்கள் மீதான அடக்குமுறை அதிகம் என்றும், கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் கடந்த 50 ஆண்டுகால திராவிட கட்சிகளின் ஆட்சிகள் தமிழகத்தை கடைசி நிலையில் வைத்து விட்டன என்றும், ‘நியூஸ் 7’ தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் கூறினார்.

‘நீட்’ தேர்வு தேவை என்று வலி யுறுத்திய அவர், கணிதம், விஞ்ஞானத் தில் 100 சதவீத மதிப்பெண்களை எடுக்கக் கூடிய மாணவர்கள் நீட் தேர்வை சந்திக்க முடியாதா என்று கேட்டார். ‘இமயம்’ தொலைக் காட்சிக்கு அளித்த நேர்காணலில் இந்தியை எதிர்ப்பது என்பது அரசியல் வெற்று முழக்கம். தமிழக பள்ளிகளில் இந்தியைப் படிக்க வாய்ப்புகள் உருவாக்கப்பட வேண்டும் என்றும், இந்தியை ஆதரித்து, தமிழகம் முழுதும் தங்கள் கட்சி சார்பில் பரப்புரை இயக்கம் நடத்தப்படும் என்றும் அறிவித்தார்.

‘ஹைடிரோ கார்பன்’, ‘மீத்தேன்’ போன்ற திட்டங்களை எதிர்ப்பது தவறு என்று கூறிய அவர், இத் திட்டங்களை எதிர்த்தால் பிறகு தமிழ் நாட்டுக்கு தேவையான எரிபொருள் எப்படி கிடைக்கும் என்று வினா எழுப்பினார். எந்த ஒரு நிலத்திலும் கனிமவளத்தை தோண்டி எடுக்க அரசுக்கு உரிமையுள்ளது என்று கூறிய அவர், நிலத்தின் முழுமையான உரிமை அரசுக்கே உரியது என்றும் கூறினார்.

விவசாயிகள் கோரிக்கையில் உள்ள நியாயத்தைத் தான் ஆதரித்தாலும், டெல்லியில் அய்யாக்கண்ணு நடத்தும் போராட்ட வடிவங்கள் ‘அவமானகரமாக’ என்று கூறிய டாக்டர் கிருஷ்ணசாமி, தமிழ்நாட்டின் அடிப்படையான பிரச்சினை விவசாயிகள் பிரச்சினைகள், விவசாயத்துக்கு அடிப்படையான சமூகம் - தேவேந்திர குல வேளாளர் சமூகம்; எனவே தேவேந்திர குல வேளாளர் சமூக வளர்ச்சி தான் - விவசாய வளர்ச்சி என்றார். தனித் தொகுதி முறை மட்டும் இருந்திருக்கா விட்டால், தமிழ்நாட்டில் நாங்கள்

**இந்தியை ஆதரித்து, தமிழகம் முழுதும் தங்கள் கட்சி சார்பில் பரப்புரை இயக்கம் நடத்தப்படும் என்கிறார் கிருஷ்ணசாமி**

ஆட்சி அதிகாரத்துக்கே வந்திருப்போம். இடஒதுக்கீடு இந்தப் பட்டியல்தான் தடைபடுத்தி விட்டது என்றும் அவர் கூறினார்.

தமிழ் தேசியம், தனித் தமிழ்நாடு என்ற கோரிக்கைகள் எல்லாம் முடிவு பெற்றுவிட்டன. இப்போது நாம் இருப்பது இந்திய தேசியத்தில்தான். எனவே இந்திய தேசப் பற்று, நமக்கு வேண்டும் என்று ‘இமயம்’ தொலைக் காட்சி நேர்காணலில் அவர் கூறிய தோடு, தங்களது ‘தேவேந்திர குல வேளாளர்’ அடையாள மீட்பு கோரிக்கைக்கு பா.ஜ.க. ஆதரவு காட்டும்போது, அவர்களோடு கரம் கோர்க்க தயாராக இருப்பதாகக் கூறினார்.

அருந்ததியினருக்காக தனியாக 3 சதவீத இடஒதுக்கீடு அளித்த பிறகு, அதையும் தாண்டி, பட்டியல் இனப் பிரிவில் உள்ள பிற பிரிவினருக்கான இடங்களையும் அருந்ததியினர் ஆக்கிரமித்துக் கொள்வதை ஏற்க முடியாது என்று அவர் கூறினார். தமிழ்நாட்டில் அ.இ.அ.தி.மு.க. அணிக்குள் இப்போது நடக்கும் குழப்பங்களுக்கு பா.ஜ.க. தான் காரணம் என்பதை தன்னால் ஏற்க முடியாது என்றும், இதை கூறு வதற்காக தன்னை பா.ஜ.க. ஆதரவாளர் என்று கூற முடியாது என்றும், ‘தமிழ் இந்து’ நாளேட்டுக்கு அளித்த பேட்டியில் கூறினார். பலத்த சர்ச்சைகளை உருவாக்கியிருக்கும் டாக்டர் கிருஷ்ணசாமி கருத்து களுக்கு பதிலளித்து இந்திய குடியரசு கட்சித் தலைவர் செ.கு.தமிழரசன் வெளியிட்ட அறிக்கையை ‘தமிழ் இந்து’ நாளேடு வெளியிட்டுள்ளது. மே 8ஆம் தேதி வெளி வந்துள்ள செ.கு. தமிழரசன் அவர்களின் மறுப்பு அறிக்கை:

டாக்டர் கிருஷ்ணசாமியின் பேட்டியை ‘5 கேள்விகள் - பதில்கள்’ பகுதியில் படித்தேன். இடஒதுக்கீடு பற்றிய அவரது கருத்துகளில் நான் முரண்படுகிறேன். ஒருவர் ஒரு கருத்தைச் சரியென்று கூறி, அதில் உறுதியாக இருக்கும்போது, அதைப் பற்றி விமர்சனம் செய்வதே சரியான விமர்சனமாக இருக்க முடியும். அம்பேத்கருக்கு புனே ஒப்பந்தத்தில் உடன்பாடு கிடையாது. அவர் கையெழுத்திடுவதற்கு நிர்ப்பந்திக்கப் பட்டார். அப்படி இருக்கும்போது, தற்போதைய தேர்தல் இடஒதுக்கீட்டு முறையை ஏற்றுக்கொண்டார் என்று அம்பேத்கரைக் குற்றம்சாட்டுவது தவறு.

கல்வி, வேலைவாய்ப்பு, அரசியல் என்று மூன்று வகைகளில் தற்போது இடஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது. கல்வி, வேலைவாய்ப்பு இடஒதுக்கீடுகள் அரசியல் சாசனத் தால் உறுதிப்படுத்தப்பட்டவை. அரசியல் இடஒதுக்கீடு யாரும் எந்தக் கோரிக்கையும் வைக்காமலே நாடாளுமன்றத்தால் தொடர்ந்து நீட்டிக்கப்பட்டு வருகிறது. அந்த வாய்ப்பைப் பயன்படுத்தித் தேர்தலில் போட்டியிட்ட கிருஷ்ணசாமி, தற்போது அதைக் குறைசொல்வதில் எந்த தார்மிக நியாயமும் இல்லை.

எங்களைப் பட்டியல் சாதிகளின் பிரிவில் சேர்த்தது தவறு என்கிறார் கிருஷ்ணசாமி. அவர் வரலாற்றைத் தெரிந்துகொள்ளவில்லை என்றே தோன்றுகிறது. பட்டியல் சாதிகள் என்ற பிரிவை உருவாக்கியது சைமன். 1928-ல் இந்தியாவுக்கு சைமன் கமிஷன் வந்தபோது, ஒடுக்கப்பட்ட மக்களுக்குரிய உரிமைகளை வழங்கிய பிறகுதான் இந்தியாவுக்கு டொமினியன் அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்று முடிவெடுத்து உருவாக்கப் பட்ட பட்டியல் அது. ஏறக்குறைய இரண்டாண்டு காலம், 700-க்கும் மேற்பட்ட சாதிகள் பரிசீலிக்கப்பட்டு, இந்தப் பட்டியல் உருவாக்கப்பட்டது. எங்களைப் பட்டியல் சாதியில் சேர்த்துக் கொள்ளுங்கள் என்று சைமன் கமிஷனில் யார் மனு கொடுத்தார்கள்?

அவர்களின் முப்பாட்டன்கள் யாரோ சைமனிடம் மனு கொடுத்த தால்தான் இடஒதுக்கீடு வழங்கப்பட் டிருக்கிறது.ஒரு தலித் தலைவருக்கு இந்த வரலாறு எப்படித் தெரியாமல் போனது? மிக முக்கியமாக, கிருஷ்ண சாமி ஒட்டுமொத்த சமூகத் தன்மையைப் புரிந்துகொள்ளவில்லை. எந்தப் பெயர் வைத்துக்கொண்டாலும் சமூகம் ஒடுக்கப்பட்டவனாகத்தான் பார்க்கிறது என்பதுதான் உண்மை. அடித்தட்டு மக்களின் அரசியல், சமூக, பொருளாதார உரிமைகளை வலியுறுத்திய அம்பேத்கரை அரசியல் லாபங்களுக்காகத் தவறாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டாம். வட்டமேஜை மாநாட்டில் காந்தி யிடம் அம்பேத்கர் கேட்ட அந்தக் கேள்விதான் நினைவுக்கு வருகிறது, ‘ஒடுக்கப்பட்டவர்களுக்கு நீங்கள் என்ன ஒற்றைப் பிரதிநிதியா?’

**– செ.கு.தமிழரசன், மாநிலத் தலைவர், இந்தியக் குடியரசுக் கட்சி.**

# நீதிபதிக்கு இலஞ்சப் பேரம்: ஜெயேந்திரர் சிக்குவாரா?

சங்கரராமன் கொலை வழக்கில் ஜெயேந்திரர் விடுதலை செய்யப்பட்டதை எதிர்த்து மேல்முறையீடு செய்யாதது ஏன்? அவருக்கும் நீதிபதிக்கும் இடையிலான தொலைபேசி உரையாடல் குறித்து என்ன விசாரணை நடத்தப்பட்டது என்பது தொடர்பாக புதுச்சேரி, தமிழக அரசுகள் இன்று விளக்கம் அளிக்குமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் கோயில் மேலாளர் சங்கரராமன் கடந்த 2004-ல் கொலை செய்யப்பட்டார். இதுதொடர்பாக காஞ்சி ஜெயேந்திரர், ரவி சுப்பிர மணியம், ரகு உள்ளிட்ட பலர் கைது செய்யப்பட்டனர். இந்த வழக்கை விசாரித்த புதுச்சேரி மாநில அமர்வு நீதிமன்றம், குற்றம் சாட்டப்பட்ட அனைவரையும் வழக்கில் இருந்து விடுதலை செய்து தீர்ப்பளித்தது.

இந்த வழக்கை முதலில் விசாரித்த நீதிபதியும், ஜெயேந் திரரும் தொலைபேசியில் பேசிய தாக உரையாடல் ஒன்று வெளியானது. இதுகுறித்து சென்னை மத்திய குற்றப்பிரிவு சைபர் கிரைம் கூடுதல் காவல் துணை ஆணையர் விசாரணை நடத்த உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. ஆனால், அவர் அதன்பிறகு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அவர் நடவடிக்கை எடுக்காததன் பின்னணி குறித்து சிபிஐ விசாரிக்க உத்தரவிடக் கோரி உயர்நீதிமன்றத்தில் மணிகண்டன் என்பவர் வழக்கு தொடர்ந்தார். நீதிபதிகள் என்.கிருபாகரன், வி.பார்த்திபன் அடங்கிய அமர்வில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது மனுதாரர், ‘‘சங்கரராமன் கொலை வழக்கில் கீழ் நீதி மன்றம் பிறப்பித்த தீர்ப்பை எதிர்த்து புதுச்சேரி மாநில அரசு இதுவரை மேல்முறையீடு செய்யவில்லை. மேலும் விசாரணை நீதிமன்ற நீதிபதியும், ஜெயேந்திரரும் தொலைபேசியில் பேசிய உரையாடல் குறித்த வழக்கிலும் இன்னும் அறிக்கை தாக்கல் செய்யவில்லை’’ என்று வாதிட்டார். இதையடுத்து, இந்த வழக்கை 5ஆம் தேதி (இன்று) விசாரிப்பதாக நீதிபதிகள் கூறினர். மனுதாரரின் குற்றச்சாட்டு குறித்து தமிழக, புதுச்சேரி மாநில அரசுகள் அதற்குள் பதில் அளிக்கு மாறும் உத்தரவிட்டனர்.

தேர்தல் ஆணையத்துக்கு இலஞ்சம் தர முயன்றதாக - டிடிவி. தினகரன் மீது பாயும் சட்டம், நீதிபதிக்கே இலஞ்சம் தருவதற்கு பேரம் பேசிய ஜெயேந்திரர் மீது பாயாதது ஏன்?

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41. ✆9941613535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 12th May 2017

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN